# வேதாகமத்திற்குப் புறம்பே சாட்சியளிக்கப்பட்ட வகையில் அவரது மனிதத்துவம்

*இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பற்றி நாம் மிகவும் விரிவாகக் கண்டோம். தெய்வீகத்துவத்தைப் பற்றி நாம் பேசும் பொழுது, மிகவும் மேலானவராயிருக்கின்ற தேவனைப் பற்றி நாம் பேசுகின்றோம். தேவனை நபர்த்துவத்தில் அடையாளப் படுத்துவதற்கு நாம் விரும்பும் பொழுது, பிதாவாகிய தேவனை, குமாரனாகிய தேவனை அல்லது பரிசுத்த ஆவியானவராகிய தேவனைப் பற்றிப் பேசுகின்றோம். இயேசு, குமாரனாகிய தேவனாயிருக்கிறார் என்று நாம் கண்டிருக்கின்றோம். இயேசு, திரு அவதாரம் எடுத்த தேவனாக, மாம்சத்தில் வந்த தேவனாக இருக்கின்றார். டொஸேட்டிக்ஸ் (Docetics) என்பவர்கள் இயேசுவின் மனிதத்துவத்தைப் புறக்கணிக்கின்றனர், ஏனென்றால் தேவன் (தூய ஆவியானவர்) தம்மை அசுத்தமான பொருளுடன் (மாம்சத்தில்) அவ்வளவு நெருக்கமாய் அடையாளப்படுத்திக் கொள்ள முடியாது என்று அவர்கள் நம்புகின்றனர். அது மத எதிர்ப்புக் கொள்கையாய் இருந்தது; அது இன்னமும் உள்ளது. ஏன் இந்த குழப்பம்? தேவன் இரட்சகராயிருப்பதில்லையா? இயேசு மனிதராயிருந்தார் என்பதைப் புரிந்து கொள்ளுவது ஏன் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கின்றது?*

*இயேசுவின் மனிதத்துவமானது, தேவன் மனித குலத்தை மீட்பதற்காக மாம்சத்தில் வந்தார் என்ற திகைப்பூட்டும் உணர்ந்தறிதலை நமக்குக் கொண்டு வருகின்றது. இரத்தத்தில் உயிர் இருக்கிறது என்று ஆதிகாலத்தில் இருந்தே மனிதருக்குப் போதிக்கப்பட்டுள்ளது. பாவங்களுக்கான பலியில் இரத்தம் சிந்துதல் அவசியமாய் இருந்தது. இருப்பினும் விலங்குகளின் இரத்தம் பாவத்தை நீக்க முடியாததாயிருந்தது (லேவி. 17:11; எபி. 10:4). ஆகையால் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாத நமது பாவம் நிறைந்த நிலையில் இருந்து நம்மை இரட்சிப்பதற்கு குமாரனாகிய தேவன் முழுமையான, பாவமற்ற தகுதி பெற்ற, எல்லையற்ற பயன் மிக்க இரத்தப்பலி ஒன்றை அளித்தார் (எபி. 9:11-14). இதைக் குறித்துக் கொள்ளுங் கள்! சிலுவையின் மீது சிந்தப்பட்ட இரத்தம் ஏதோ ஒரு வகையான "தெய்வீக" இரத்தம் அல்ல. அந்த உடல் மனிதத்துவத்திற்கு மேம்பட்ட உடல் அல்ல. சிலுவையில் இயேசுவின் மரணம் என்பது தேவனுடைய*

மரணம் அல்ல. அது ஒரு மனித உயிரின் மரணமாகவே இருந்தது, ஒரு மனிதரின் மரணமாகவே இருந்தது. அது ஒரு அவசியமான பலியாக இருந்தது. (இதை விட மலிவான பலி போதுமானதாய் இருந்திருந்தால் பிதா வானவர் தமது குமாரனை இதற்கு உட்படுத்தியிருப்பாரா?) ஆகையால், இயேசுவின் மனிதத்துவத்தை மறுப்பது என்பது உண்மையில் நமது சொந்த இரட்சிப்பையே மறுப்பதென்பதாகும். இயேசுவின் தெய்வீகத்து வத்தையும், அவரது மனிதத்துவத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ள நாம் இப்பொழுது, அவரது வரலாற்றுத்துவத்தையும் மற்றும் அவரது மனிதத்துவத்தையும் வலியுறுத்தும் பதிவுகளுக்குத் திரும்புவோம்.

குமாரனாகிய தேவனைப் பற்றி வேதாகமம் கூறுவதென்ன என்பதிலேயே நாம் அடிப்படை ஆர்வம் உள்ளவர்களாய் இருக்கின்றோம். இருப்பினும், நான் பல பத்தாண்டுகளாகப் பிரசங்கித்து மற்றும் போதித்து வந்திருக்கும் வேளையில், இயேசு இருந்தார் என்பதற்கு வேதாகமத்திற்குப் புறம்பே ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்று என்னிடத்தில் அடிக்கடி கேட்கப்பட்டுள்ளது. உலகத்தில் இயேசுவின் பிரசன்னத்தின் செல்வாக்கு நம்மிடையே உள்ளது என்பதற்கு ஆண்டுக் கணக்கீட்டு முறையானது ஒரு விளக்கமாக இருக்கின்றது!

கேள்வி கேட்பவர்கள் இலக்கியம் சார்ந்த ஆதாரத்தை விரும்புகின்றனர். கிறிஸ்துவின் வாழ்வு குறித்து “வேதாகமத்திற்குப் புறம்பே” ஆதாரங்கள் உள்ளதா என்பது பற்றி ஆச்சரியப்படுகின்றவர்களின் பயன்பாட்டிற்காக, காலத்தின் அழிவுகளினூடே தப்பிப் பிழைத்துள்ள ஒரு சில எழுத்து ஆதார மூலங்களை நாம் சுருக்கமாய்க் குறிப்பிடலாம். நாங்கள் இந்த ஆதாரங்களுக்கு அர்த்தம் சொல்லவோ, அல்லது அதன் தரத்தை எடை போடவோ செய்யவில்லை என்பதை தயவு செய்து கவனியுங்கள். வேதாகமத்திற்குப் புறம்பே கூட இயேசு குறிப்பிடப்படுகின்றார் என்பதற்கான ஆதாரமாக மட்டுமே இவைகளை நாம் கொடுக்கின்றோம்.

இயேசு ஒரு யூதராக ஜீவித்து, ஏறக்குறைய யூதர்கள் மத்தியில் மட்டுமே ஊழியம் செய்திருந்ததால், இயேசு வாழ்ந்தார் என்பதை மறுக்கும் இடர்ப்பாடுள்ள பணியை எந்த ஒரு யூத மூல ஆதாரமும் தேர்ந்து கொள்ளவில்லை என்பது கவனிக்க ஆர்வமுள்ள விஷயம் ஆகும். இதற்கு எதிரிடையாக, வேதாகமத்தை விடுத்து, மற்றுள்ள யூத மூல ஆதாரங்கள் அவர் வாழ்ந்தார் என்றே சுட்டிக் காட்டுகின்றன. உதாரணமாக கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் அவர்கள் தம்முடைய “யூதர்களின் பண்டைக் காலங்கள்” (Antiquities of the Jews) என்ற நூலில் பின்வருவதைப் பதிவு செய்துள்ளார்.

> மற்றும் ஏறக்குறைய இந்த வேளையில், நாம் மனிதர் என்று அழைக்க வேண்டுமென்றால், இயேசு என்ற ஞானமுள்ள மனிதர் ஒருவர் எழும்பினார். ஏனெனில் அவர் வியக்கத்தக்க செயல்களை (அற்புதங்களை)ச் செய்பவராயிருந்தார், சத்தியத்தைச் சந்தோஷத் தோடு ஏற்றுக் கொண்ட மனிதர்களுக்கு ஒரு போதகராய் இருந்தார். அவர் பல யூதர்களையும், பல கிரேக்கர்களையும் கூட வழி

நடத்தினார். இந்த மனிதர் கிறிஸ்துவாயிருந்தார்.[1]

ரோமானிய எழுத்தாளர்களிடமிருந்து வரும் ஆதாரமும் கூட, இயேசு உண்மையிலேயே ஒரு வரலாற்று நபராகவே இருந்தார் என்பதைக் காண்பிக்கின்றது. முதல் நூற்றாண்டின் திருப்பத்தில் சுமார் (கி.பி.) 120 வரை டேசிட்டஸ் என்ற ரோம வரலாற்றாளர் ஒருவர் வாழ்ந்து வந்தார். கி.பி. 64ல் ரோமாபுரியின் பெரும்பகுதியை அழித்திருந்த தீயைப் பற்றி அவர் எழுதிய போது, அந்தப் பயங்கர நிகழ்ச்சிக்கு ரோமாபுரியில் வாழ்ந்திருந்த கிறிஸ்தவர்கள் மேல் குற்றம் சாட்டுவதற்கு நீரோவின் முயற்சியைப் பற்றி டேசிட்டஸ் எழுதினார்:

> இதன் விளைவாக, [ரோமாபுரிக்குத் தீ வைத்து விட்ட தாகத் தம்மேல் குற்றம் சாட்டப்பட்டதிலிருந்து] தப்பிப்பதற்காக, நீரோ தங்களின் அருவருப்புகளுக்காக வெறுக்கப்பட்ட ஒரு இனமான, மக்களால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள்மேல் அந்தக் குற்றத்தை ஒட்ட வைத்து, அவர்களை மிகவும் கொடிய வாதனைகளினால் உபத்திரவப் படுத்தினார். அவர்களின் பெயர் தொடக்கம் பெற்ற நபரான கிறிஸ்து என்பவர் திபேரியு ராயனின் ஆட்சிக் காலத்தில், நமது ஆளுநர்களில் ஒருவராயிருந்த பொந்தியு பிலாத்துவின் கரங்களில் மிகக் கடுமையான தண்டனையடைந்திருந்தார் … (Tacitus *Annals*, xv. 44).

யூத மற்றும் ரோம ஆதார மூலங்களில் இருந்து மற்ற சாட்சியங்களும் குறிப்பிடப்பட முடியுமென்றாலும், இங்கு கொடுக்கப்பட்டுள்ளவைகள் நமது நோக்கத்தை நிறைவேற்றப் போதுமானவைகளாகும். இயேசு என்பவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில், வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் வாழ்ந்திருந்த மனிதர்ஆவார். இது வேதாகமத்திலிருந்தும், ஆதிகிறிஸ்தவ இயக்கத்திற்குப் பொதுவாக எதிர்ப்பாயிருந்த மனிதர்களால் எழுதப்பட்ட வேதாகமத்திற்குப் புறம்பான ஆதார மூலங்களில் இருந்தும் சரி பார்க்கப்படுகின்றது. சில ஆதார மூலங்கள் விமர்சகர்களால் தாக்கப்பட்டிருந்தாலும், வரலாற்று ரீதியான இயேசுவானவர் வேதாகமமில்லாத ஆதார மூலங்களிலும் பேசப்பட்டார் என்ற உண்மை இன்னமும் நிலை நிற்கின்றது இயேசு உண்மையில் ஒருபோதும் இருந்திருக்கவில்லையென்றால் இயேசுவை, பிலாத்து மற்றும் திபேரியு போன்ற வரலாற்று நபர்களுடன் தொடர்பு படுத்தி யோசிப்பாஸ் மற்றும் டேசிட்டஸ் போன்ற எழுத்தாளர்கள் எழுத வேண்டிய அவசியம் என்ன?

பழங்கால மதச் சட்ட நூல்கள் இயேசுவை, "பெரிதளவில் தேவன், பெரிதளவில் மனிதன்" ("Very God and Very man") என்று விவரிக்கின்றன. இதுவே கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையாகவும் சாராம்சமாகவும் இருக்கின்றது. கிறிஸ்தவம் அமர்ந்துள்ள இந்த மேல் வளைவான சத்தியமானது பழைய ஏற்பாட்டுப் பாடக் கருத்துக்களை அதிகமாய்ப் பயன்படுத்திய சுவிசேஷத்தின் தொடக்க கால அறிவிப்பில் இருந்தும், கி.பி. முதல் நூற்றாண்டின் கடைசிப் பாதி வரையிலும் முற்றிலும் தொடர்ந்திருந்ததாகத் தோன்றும் வேதவசனப் படிப்பில் இருந்தும்

பெறப்பட்டதாகும்.

குறிப்புகள்

[1]Josephus *Antiquities* xviii. 3.3.; quoted in Everett F. Harrison, *A Short Life of Christ* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1968), 17.